

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், சட்டப்பேரவைத் தலைவர் மு.அப்பாவு அவர்கள் முன்னிலையில் நேற்று முன்தினம் (9.12.2024) தலைமைச் செயலகத்தில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவையொட்டி பேரவைத் தலைவர் அவர்களைத் தலைவராகக் கொண்ட குழுவால் தயாரிக்கப்பட்ட சட்டமன்ற நாயகர்கலைஞர் நூற்றாண்டு விழா சிறப்பு மலரை வெளியிட நீர்வளத்துறை அமைச்சரும், அவை முன்னவருமான துரைமுருகன் அவர்கள் பெற்றுக்கொண்டார். இந்த நிகழ்ச்சியில், அமைச்சர் பி.கே.சேகர்பாபு, உயர் கல்வித் துறை அமைச்சரும், விழாக் குழு இணைத் தலைவருமான முனைவர் கோவி. செழியன், சட்டமன்றப் பேரவை துணைத் தலைவர் கு.பிச்சாண்டி, அரசு தலைமைக் கொறடா கா.ராமச்சந்திரன், நாடாளுமன்ற உறுப்பினர் தொல். திருமாவளவன், சட்டமன்ற உறுப்பினர் கு.செல்வப்பெருந்தகை, விழாக் குழு உறுப்பினர்கள், பேரவை முன்னாள் தலைவர் ஆர்.ஆவுடையப்பன், மாநில சிறுபான்மையினர் ஆணையத்தின் முன்னாள் தலைவர் மற்றும் சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் எஸ்.பீட்டர் அல்போன்ஸ், சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் சி.ஞானசேகரன், பேரவை முன்னாள் செயலாளர் மா.செல்வராஜ், சட்டமன்றக் கட்சித் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்கள், சட்டப்பேரவை முதன்மைச் செயலாளர் முனைவர் கி. சீனிவாசன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள், சட்டப்பேரவைத் தலைவர் மு.அப்பாவு முன்னிலையில் நேற்று முன்தினம் (9.12.2024) தலைமைச் செயலகத்தில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவையொட்டி, நூற்றாண்டு விழா நாயகர் கலைஞர் சட்டமன்றத்தின் மூலம் சமூக முன்னேற்றத்திற்கு ஆற்றிய சாதனைகளில் மாணவர்களை ஈர்த்தது என்ற தலைப்பில் மாநில அளவில் நடைபெற்ற கருத்தரங்கில் முத்தமிழறிஞர் கலைஞர் குறித்து சிறப்பான கருத்துகளை எடுத்துரைத்ததற்காக தேர்ந்தெடுக்கப்பட்ட 3 பள்ளி மற்றும் 3 கல்லூரி மாணவ, மாணவியர்களுக்கு பரிசுத் தொகைக்கான வங்கி வரைவோலைகளையும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவச்சிலைகளையும் வழங்கி வாழ்த்து தெரிவித்தார். இந்த நிகழ்ச்சியில், நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், அமைச்சர்கள் பி.கே. சேகர்பாபு, முனைவர் கோவி. செழியன், சட்டமன்றப் பேரவை துணைத் தலைவர் கு.பிச்சாண்டி, அரசு தலைமைக் கொறடா கா.ராமச்சந்திரன், தொல். திருமாவளவன் எம்.பி., கு.செல்வப்பெருந்தகை எம்.எல்.ஏ. , விழாக் குழு உறுப்பினர்கள், பேரவை முன்னாள் தலைவர் ஆர். ஆவுடையப்பன், எஸ்.பீட்டர் அல்போன்ஸ், முன்னாள் எம்.எல்.ஏ.சி.ஞானசேகரன், பேரவை முன்னாள் செயலாளர் மா. செல்வராஜ், சட்டமன்றக் கட்சித் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்கள், சட்டப்பேரவை முதன்மைச் செயலாளர் முனைவர் கி.சீனிவாசன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.



நேற்று (10.12.2024) தமிழ்நாடு அரசின் சார்பில், மூதறிஞர் இராஜாஜி அவர்களின் 146 வது பிறந்தநாளை முன்னிட்டு, சென்னை பாரிமுனை உயர்நீதிமன்ற வளாகத்தில் அமைந்துள்ள அன்னாரது திருவுருவச் சிலைக்கு அருகில் அலங்கரித்து வைக்கப்பட்டுள்ள திருவுருவப்படத்திற்கு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் மரு.இரா.வைத்திநாதன், செய்தி மக்கள் தொடர்புத் துறை கூடுதல் இயக்குநர்கள் மு.பா.அன்புச்சோழன் (மக்கள் தொடர்பு), எஸ்.செல்வராஜ் (செய்தி), ஆகியோர் மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள்.



நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் நேற்று முன்தினம் (9.12.2024) சட்டமன்றப் பேரவையில், மதுரை மாவட்டம், மேலூர் வட்டம், நாயக்கர்பட்டி கிராமத்தில் இந்துஸ்தான் ஜிங்க் லிமிடெட் நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட டங்ஸ்டன் கனிமச் சுரங்கம் அமைப்பதற்கான உரிமத்தை உடனடியாக இரத்து செய்திடவும், மாநில அரசுகளின் அனுமதியின்றி எந்தச் சுரங்க உரிமத்தையும் வழங்கக் கூடாது என்றும், ஒன்றிய அரசை வலியுறுத்தி அரசினர் தனித் தீர்மானத்தை முன்மொழிந்து உரையாற்றினார்.

### பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் – ரூ. 280 கோடி மதிப்பில்

# 493 புதிய திட்டப் பணிகள்! துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் தொடங்கி வைத்தார்!

## 559 நபர்களுக்கு பணிநியமன ஆணைகள் வழங்கினார்!



**சென்னை,டிச.11 –**

**தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (09.12.2024) ரிப்பன் கட்டட வளாகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சி யில் பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் ரூ.29.88 கோடி மதிப்பில் முடிவுற்ற 17 திட்டப்பணி களைப் பொதுமக்களின் பயன்பாட்டிற்குத் திறந்து வைத்து, ரூ.279.50 கோடி மதிப்பில் 493 புதிய திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டி பணிகளைத் தொடங்கி வைத்து, 559 நபர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார்.**

அதன் விவரம் வருமாறு:

முதலமைச்சர் அவர்களின் சீரிய நல்லாட்சியில் தமிழ்நாட்டின் தலைநகராகமாகவும், இந்தியாவிலும், உலக அளவிலும் முக்கியத்துவம் பெற்ற நகரமாகவும் திகழ்ந்து வரும் பெருநகர சென்னை மாநகராட்சியில் பாலங்கள், சாலைகள், மேம்பாட்டு திட்டங்கள், அடிப்படை உள் கட்டமைப்பு வசதிகள் செயல்படுத்தப்பட்டு நாள்தோறும் திறக்கப்பட்டு வருகின்றன.

தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள், பெருநகர சென்னை மாநகராட்சியில் மக்கள் உடல்நலம் பேணும் வகையில் 8 புதிய விளையாட்டுத் திடல்கள், புனரமைக்கப்பட்ட 2 நீர்நிலைகள், மக்களின் ஆரோக்கியம் மற்றும் பொழுதுபோக்கிற்கான 2 புதிய பூங்காக்கள், புதிய பள்ளிக் கட்டடம் மற்றும் சுகாதார மைய கூடுதல் கட்டடம், நாய்களின் எண்ணிக்கையினை கட்டுப்படுத்துவதற்காக புதிதாக கட்டப்பட்டுள்ள 3 நாய்கள் இனக்கட்டுப்பாட்டு மையங்கள் என ரூபாய் 29.88 கோடி மதிப்பீட்டில் முடிவுற்ற 17 புதிய திட்டப் பணிகளைப் பொதுமக்களின் பயன்பாட்டிற்குத் திறந்து வைத்தார்.

மேலும் 12 நீர்நிலைகளைப் புனரமைத்தல், மெரினா கடற்கரையில் நீலக் கொடி கடற்கரை திட்டம், 3 மழைநீர் வடிகால் பணிகள், 291 அம்மா உணவகங்களின் மேம்பாட்டு பணிகள், 10 புதிய ஆரோக்கிய நடைபாதைகள், 3 சமூக நல மையங்கள் கட்டும் பணி, செவிலியர் மற்றும் பெண்கள் தங்கும் விடுதி, 2 நகர்ப்புர ஆரம்ப சுகாதார மையங்கள், சைதாப்பேட்டை காய்கறி மற்றும் பழங்கள் சந்தை, 3 இடங்களில் சென்னை நகர நுழைவுக்கான சாலை பெயர்ப் பலகைகள், 3 நடைபாதைகள் மேம்படுத்துதல், 7,644 தெருக்களுக்கு புதிய பெயர் பலகைகள், 148 பள்ளிக்கூடங்களை சீரமைத்தல், 12 கால்நடை கொட்டகைகள் அமைக்கும் பணிகள், நாய்கள் இனக் கட்டுப்பாட்டு மையம், என ரூபாய் 279.50 கோடி மதிப்பில் 493 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார்.

இதனைத் தொடர்ந்து, பெருநகர சென்னை மாநகராட்சியில் பணிக் காலத்தில் காலமான பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கு கருணை அடிப்படையில் 106 நபர்களுக்கு பணிநியமன ஆணைகளை வழங்கினார். மேலும் மாநகராட்சி சுகாதாரத்துறை யில் மருத்துவ அலுவலர்கள், செவிலியர்கள் மற்றும் மருத்துவப் பணியாளர்கள் என 453 நபர்களுக்கு ஒப்பந்த அடிப்படையில் பணி நியமன ஆணைகளை வழங்கினார்.

இந்த நிகழ்ச்சியில் நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, சட்டமன்ற உறுப்பினர்கள் எஸ்.சுதர்சனம், ப. தாயகம் கவி, எஸ்.அரவிந்த் ரமேஷ், ஆர்.டி. சேகர், த.வேலு, இ.பரந்தாமன், டாக்டர்.நா.எழிலன், ஐட்ரீம் ஆர்.மூர்த்தி, ஆ.வெற்றி அழகன், ஜே.ஜே.எபினேசர், ஏ.எம்.வி.பிரபாகர் ராஜா, கா.கணபதி, ஜோசப் சாமுவேல், துணை மேயர் மு. மகேஷ் குமார், நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் தா.கார்த்திகேயன், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் ஜெ.குமரகுருபரன், சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரிய மேலாண்மை இயக்குநர் டாக்டர் டி.ஜி. வினய், மாமன்ற ஆளுங்கட்சி தலைவர் ந.இராமலிங்கம், நிலைக்குழுத் தலைவர்கள், மண்டலக்குழுத் தலைவர்கள், மாமன்ற உறுப்பினர்கள், அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



தேனி வடக்கு மாவட்ட இளைஞரணி சார்பில் வடக்கு மாவட்ட துணை அமைப்பாளர் செல்லதுரை ஏற்பாட்டில் கழக மாநில இளைஞர் அணி செயலாளர் தமிழ்நாடு துணை முதல்வர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு தேனியில் சமதர்மபுரத்தில் மனிதநேய காப்பகத்தில் இனிப்புகள் வழங்கி காலை உணவு வடக்கு மாவட்டச் செயலாளர் தங்க தமிழ்ச்செல்வன் எம்.பி., வழங்கினார். உடன் சரவணகுமார் எம்.எல்.ஏ., வடக்கு மாவட்ட இளைஞர் அணி மாவட்ட அமைப்பாளர் ஆசிப் கான், நகர செயலாளர் நாராயண பாண்டியன், நகர மன்ற தலைவர் ரேணுபிரியா பாலமுருகன், துணைத் தலைவர் வழக்கறிஞர் செல்வம். மற்றும் இளைஞர் அணி அரவிந்த் கார்த்தி, பாலா, விஷ்வா, கௌதம், நிவாஸ், கோகுல் கழக முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

### அணைக்கட்டு தொகுதிகளுக்கு பயன்பெறும்

# மினி பேருந்துகளை மீண்டும் இயக்க அனுமதித்திடுக!

## சட்டப் பேரவையில் ஏ.பி.நந்தகுமார் வலியுறுத்தல்!



சென்னை, டிச. 11 -

அணைக்கட்டுத் தொகுதியில் மினி பேருந்து களை மீண்டும் இயக்கிட அனுமதி அளித்திட வேண்டும் என்று பேரவையில் கேள்வி நேரத்தின் போது உறுப்பினர் ஏ.பி.நந்தகுமார் வலியுறுத்தினார்.

இது குறித்து நடைபெற்ற விவாதம் வருமாறு:

**ஏ.பி.நந்தகுமார்:** பேரவைத் தலைவர் அவர்களே, அணைக்கட்டுத் தொகுதியானது கிராமங்கள் நிறைந்த பகுதியாகும். நான் பலமுறை இந்த மாமன்றத்தில் பேசுகின்ற போது, மினி பேருந்து வசதிகளை செய்துதர வேண்டுமென்று போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களிடத்தில் கோரிக்கை வைத்திருக்கின்றேன். இப்போதும் கோரிக்கை வைக்கின்றேன். மினி பேருந்து வசதிகளை செய்து தந்தால் நன்றியுள்ள அணைக்கட்டுத் தொகுதி மக்களுக்குப் பயனாக இருக்கும். ஆகவே, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் பதில் சொல்கின்ற போது *cut chase buses* வருகின்றபோது செய்து தருகின்றேன் என்று சொன்னார். அதை எப்போது வாங்குவீர்கள்? அங்கே எப்போது அந்த பேருந்து வசதிகளை நீங்கள் செய்து தருவீர்கள் என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கின்றேன்.

**எஸ்.எஸ். சிவசங்கர்:** இது போன்று மலைவாச ஸ்தலங்களுக்கு, பேருந்து வசதிகள் இல்லாத பகுதிகளுக்கு பேருந்து வசதி செய்துதர வேண்டுமென்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஏற்கெனவே உத்தர விட்டிருக்கிறார்கள். தருமபுரி மாவட்டத்தில், அது போன்று பேருந்து வசதிகள் இல்லாத பகுதிக்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் சென்றபோது, கோரிக்கைகள் வைக்கப்பட்டு, வத்தல்மலை என்ற பகுதிக்கு மாண்புமிகு முதல்வர் அவர்களின் அறிவுரையின்படி பேருந்துகள் இயக்கப்பட்டன.

உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற அணைக் கட்டு தொகுதியில் அமைந்திருக்கின்ற பீஞ்சமந்தை பகுதிக்கு தேர்தல் காலங்களில் நானே சென்றிருக்கின்றேன். அப்போது சாலை வசதியே இல்லாமல் இருந்தது. இப்போது, திராவிட மாடல் முதல்வர் அவர்களின் ஆட்சியில் அங்கே சாலை வசதி செய்து தரப்பட்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அதற்கான பேருந்து வசதிகள் செய்து தர வேண்டுமென்று உறுப்பினர் நந்தகுமார் கோரிக்கை வைத்திருக்கின்றார். முதலமைச்சர் அவர்கள் ஒவ்வோராண்டும் புதிய பேருந்துகள் வாங்குவதற்கு உத்தர விட்டு, புதிய பேருந்துகளில் 2,750 பேருந்துகள் இப்போது பயன்பாட்டிற்கு வந்திருக்கின்றன. மீதமிருக்கின்ற பேருந்துகளில் மலைப் பகுதிகளில் இயக்குவதற்கான பேருந்துகள் வாங்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. விரைவில் அந்த பேருந்துகள் வரும். அவை வரும்போது பீஞ்சமந்தை பகுதிக்கு பேருந்துகள் இயக்கப்படும் என்பதை உறுதிபட தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.

### துணை முதல்வர் பிறந்த நாளை முன்னிட்டு–மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி ஏற்பாட்டில்

# இளையான்குடியில் இலவச மருத்துவ முகாம்!

## தமிழரசி எம்.எல்.ஏ. துவக்கி வைத்தார்!

சிவகங்கை, டிச. 11 -

சிவகங்கை மாவட்ட. தகவல் தொழில்நுட்ப அணி சார்பில் கழக இளைஞர் அணி செயலாளர் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு இளையான்குடியில் இலவசபொது மருத்துவ முகாம் நடைபெற்றது.

இந்த முகாமினை திருமதி தமிழரசி ரவிக்குமார் எம்.எல்.ஏ துவக்கி வைத்து சிறப்புரை ஆற்றினார் .முன்னாள் எம்.எல்.ஏ. சுப .மதியரசன் தலைமை தாங்கினார். தகவல் தொழில்நுட்ப அணி துணை ஒருங்கிணைப்பாளர் சுப. அன்பரசன் வரவேற்றுப் பேசினார் .

இந்த நிகழ்ச்சியில் மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் சசிவர்ணன், துணை அமைப்பாளர்கள் மே .காளிமுத்து, திருமதி கலா காசிநாதன், சோமு , வழக்கறிஞர் வினோத்,ஒன்றிய கழகச் செயலாளர்கள் ஆறு . செல்வராஜன் ,வே. தமிழ்மாறன்,கா.வெங்கட்ராமன், பேரூர்கழக செயலாளர் பி.ஏ.நஜ்மூதீன், பேரூராட்சி மன்றத் துணைத் தலைவர் டி.இபுராகீம்,தொகுதி தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர்கள் கே. கண்ணன், பாலா, இந்துமதி ,திருமுருகன் ,சிவா, வி.மணிமொழி, மணிமொழி ,அலெக்ஸ் தமிழ்வாணன், ஆரோன்சிஸ், நிர்வாகிகள் வே கருணாகரன், சிவனேசன், இளைஞர் அணி பைரோஸ்கான் கூட்டுறவு சங்கத்தலைவர் சுப. தமிழரசன், மலைமேகு,மகளிர் தொண்டரணிதுணை. அமைப்பாளர் நஸ்ருதீன்,தவுலத்,காதர் பாட்சா, நீலமேகம் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டார்கள் 400க்கும் மேற்பட்ட பொதுமக்களுக்கு இலவச மருத்துவம் சிகிச்சை அளிக்கப்பட்டது. முகாம் ஏற்பாடுகளை தகவல் தொழில்நுட்ப அணி துணை ஒருங்கிணைப்பாளர் சுப.அன்பரசன் தலைமையில் நிர்வாகிகள் செய்திருந்தனர்.



நெல்லை மாநகர தி.மு.க. சார்பில் கழக இளைஞர் அணி செயலாளர், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு நெல்லை பகுதி செயலாளர் நமச்சிவாயம் ஏற்பாட்டில் டவுண் வாகையடி முனையில் மாபெரும் பொதுக்கூட்டம் மாநகர செயலாளர் சு.சுப்பிரமணியன் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் கழக கொள்கை பரப்பு செயலாளர் திண்டுக்கல் ஐ.லியோனி பங்கேற்று சிறப்புரையாற்றினார். உடன் நெல்லை மத்திய மாவட்டப் பொறுப்பாளர் டி.பி.எம்.மைதீன்கான், மாவட்ட அவைத்தலைவர் முருகன், மாநில நெசவாளர் அணி செயலாளர் பெருமாள்,மாநகர துணை செயலாளர் அப்துல் கையூம்,பகுதி செயலாளர்கள் நமச்சிவாயம், சுப்பிரமணியன், அன்டன் செல்லத்துரை, கழக மூத்த முன்னோடி சுப்பையா உள்பட கழகத்தினர் பலர் உள்ளனர்.